ஓயாத அலைகள் 3

நிழற்படத் தொகுப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எரிமலை நவம்பர் 2000
சிறப்பு இணைப்பு

ஓயாத அலைகள் 3

காணிக்கை

ஓயாத அலைகள் -3 வரலாற்றுச்
சமரில் வீரச்சாவடைந்த
அனைத்து மாவீர்களுக்கும்
இச்சிறப்பிதழ் காணிக்கை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஓயாத அலைகள் -3
சிறப்பிதழ்

வெளியீடு:
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France
341, Rue des Pyrénées
75020 Paris
Tel: 0033 143 58 11 42
Fax: 0033 143 58 11 91
e.mail: erimalai@freesurf.fr

நிழற்படத் தொகுப்பு

வரலாற்றின் போக்கினைத் தீர்மானித்த புகழ்பெற்ற சமர்களின் வரிசையில் ஓயாத அலைகள்-3 நடவடிக்கைச் சமரும் இணைந்துவிட்டது. ஓயாத அலைகள் -3இன் சமர் ஒட்டுமொத்தமாக உல கின் கண்களையே திறக்க வைத்துவிட்டது. கண்கள் மட்டுமா திறக்கப்பட்டன. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தத்தை உணர மறுத்த மனங்கள், கேட்க மறுத்த செவிகள், பேச மறுத்த வாய்கள் எல்லாமே திறக்கப்பட்டுவிட்டன. இவ்வகையில் இதுவொரு கண்திறப்புச் சமர். "விதைக்குள்ளிருந்து விரி யும் பெரும் விருட்சமாக" ஓயாத அலைகள் மூன்றிலிருந்து விரிகின்றது தமிழரின் விடுதலைப் பெருவாழ்வு. இவ்விடுதலை விதை பல நூற்றாண்டு கால தமிழீழத் தாய்மண்ணின் தரைக்குள் உறைநிலையில் உறங்கி இன்று விழித்தெழுந்தது. இதுவே எமது விடுதலைப் போராட்டத்தின் விந்தைமிகு வரலாறாகிவிட்டது.

1999ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் நாள் ஒட்டுசுட்டானில் ஆரம்பமாகி வன்னியில் 2500 சதுர கிலோ மீற்றருக்கு அதிகமான பாரிய நிலப்பரப்பினையும், அதிஉச்ச பாதுகாப்பில் இருந்த ஆனையிறவுத் தளத் தையும், அதனைச் சூழவுள்ள தளங்களையும் தகர்த்து, யாழ் குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, தென் மராட்சியின் பச்சிலைப்பள்ளி பகுதிகளை மீட்டும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது வரை காலமும் பெற்றுத் தந்திராத வெற்றிகளை ஈட்டித்தந்த நடவடிக்கையாக ஓயாத அலைகள் -3 நடவடிக்கை விளங்குகின்றது.

தமிழீழத்தின் இதயபூமியாம் மணலாறு உள்ளிட்ட வடதமிழீழத்தின் பகுதிகளில் சிறீலங்கா இராணு வத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டு பெருமளவிலான போராயுதங்கள் மற்றும் கலங்கள் என்பனவற்றைக் கைப்பற்றி ஓயாத அலைகள் -3 நடவடிக்கை சிறீலங்காப் படைகளின் கட்டுமானத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

சிறீலங்காப் படையின் 52, 53, 54, 55, 56, 21 ஆகிய இராணுவ பிரிகேட்டுகளுக்கும், கடற்படையின் 3 பிரிவுகளுக்கும், விமானப் படையின் இரு பிரிவுகளுக்கும் பாரிய சேதத்தை இந்நடவடிக்கை ஏற்படுத்தியது. இந்நடவடிக்கையில் 6000ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டோ காணாமற்போயோ உள்ளனர் என சிறீலங்காப் பாதுகாப்புத் தரப்பால் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிறீலங்காப் படைத்தரப்பானது பெருமள விலான படையினரின் இழப்போடு, பெருந்தொகை ஆயுத தளபாட இழப்பையும் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையில் சந்தித்துள்ளது.

எமது மாண்புக்குரிய தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஓயாத அலைகள் -3இல் பெற்றுத் தந்த மாபெரும் வெற்றியின் மூலம் தமிழர்கள் ஒரு புதிய வாழ்வுக்கு ஒளியைப் பெற்றுள்ளனர். தமிழீழத்தின் கேந்திரப் பகுதிகள் எங்கும் பரவி ஆக்கிரமித்து நின்று தமிழர் தாயகத்தை சிங்களம் சிதைத்து வந்த நிலை நாம் பெற்ற வெற்றியினால் மாற்றப்பட்டுள்ளது. அழிக்கப்பட்ட பொருளாதார வளங்கள் மேலும் அழிவுக்குள்ளாகாமல் தடுக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் எமது விடுதலை குறித்த வேட்கையும் வேகமும் இன்னும் அதிகரித்துள்ளது. சர்வதேசரீதியில் எமது பிரச்சினையும் எம்மீதான கவனமும் அதிக மாகியுள்ளது.

உறுதியும் தீராத முயற்சியும் ஓர்மமுமாக நின்று பெற்ற இந்த வெற்றியோடு நாம் மேலும் தொடர்ந்து பயணிப்போம். எமது விடுதலையை வென்றெடுப்போம் செயலை ஆற்றுவதன் மூலம் நம் தேசத்தை ஆளும் வல்லமையையும் வாழ்வையும் பெறுவோம்.

ஓயாத அலைகள் -3 வரலாற்றுச் சமர் இடம்பெற்று ஓராண்டு நிறைவடைந்த நிலையில் காட்சிக்களமாய் இச் சிறப்பிதழ் விரிகின்றது.

ஓயாத அலைகள் 3

தமிழர் சேனையின் நகர்வு மார்க்கங்கள்



ஓயாத அலைகள் 3இன் வடமுனைச் சமர்

ஓயாத அலைகள் 3 படையணிகளின் நகர்வுப்பாதைகள்

விடுதலைப் புலிகளின் முன்னணி நிலைகள்

இராணுவ முன்னணி நிலைகள்

பாரிய இராணுவத் தளங்கள்

ஆட்லறித் தளங்கள்

இராணுவத் தளங்கள்

கண்டி வீதி

போராளிகளுடன் தமிழீழத் தேசியத் தலைவர்.

தாக்குதலைத் திட்டமிட்டு நெறிப்படுத்திய தேசியத் தலைவர் அவர்கள் தளபதிகளுக்கு விளக்கமளிக்கிறார்.

தாக்குதல் திட்டத்தை விளக்கும் தளபதி கேணல் பால்ராஜ்

தமிழீழ விடுதலை
Tamileelam Army

தாக்குதலணிகளுக்கு விளக்கமளிக்கும் தளபதி கேணல் சொர்ணம்.

தாக்குதலணிகளுக்கு விளக்கமளிக்கும் தளபதி கேணல் தீபன்.

ஓயாத அலைகள் 3

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின் வடபோர்முனைக்கான தாக்குதல் திட்டத்தை விளக்கும் தளபதி கேணல் பானு.

தரையிறங்கத் தயாராகும் புலிவீரர்களுக்கு விளக்கமளிக்கும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

ஓயாத அலைகள் 3

ஓயாத அலைகள் -3இன் தென்முனைப் படையணிகளுக்கு தாக்குதல் பற்றி விளக்கமளிக்கும் தளபதி கேணல் ஜெயம்.

தனங்கிளப்புச் சிங்கள இராணுவ முகாம்மீதான அதிரடித்தாக்குதல் ஒன்றிற்கான திட்டத்தை விளக்கி அணிகளைத் தயார்ப்படுத்தும் தனங்கிளப்புப் பகுதியின் தாக்குதல் தளபதி லெப். கேணல் வீமன்.

ஓயாத அலைகள் 3

ஓயாத அலைகள் -3 சமரை ஆரம்பிப்பதற்காய் உறுதியுரை கூறி புறப்படத் தயாராகும் விடுதலைப் புலிகளின் தாக்குதலணிகள்.

தமிழீழ ஆவணக்காப்பு
Tamileelam Arch

களம் நோக்கி நகருகின்ற புலிகளின் கனரக ஆயுதக் குழுவொன்று.

புலிகள் போருக்குப் போகும் பாதையைத் திருத்தும் மக்கள்.

புலிகள் போருக்குப் போகும் பாதையைத் திருத்தும் மக்கள்.

இயாத அலைகள் 3

ஒட்டுசுட்டான் படைத்தளம் மீது தாக்குதலை மேற்கொள்ளும் புலிவீரன்.

ஒட்டுசுட்டான் மினிமுகாம் பகுதியில் கைப்பற்றப்பட்ட "பவள்" கவசவாகனமும் புலிகளும்.

விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட ஒட்டுசுட்டான் சந்திப் பகுதி.

ஒட்டுசுட்டான் படைத்தளத்தைக் கைப்பற்றி கரிப்பட்டமுறிப்பை நோக்கி முன்னேறும் புலிகள்.

இயாத அலைகள் 3

மீட்கப்பட்ட நெடுங்கேணிப் பகுதியில் புலிகளின் படையணிகள்.

ஒலுமடுப் பகுதியில் இருந்து மாங்குளப் பகுதி நோக்கி இராணுவத்தை விரட்டியடிக்கும் புலிகள்.

ஒலுமடுப் பாலத்தடியில் இராணுவத் தாக்குதலை எதிர்கொள்ளும் புலிகள்.

மாங்குளச்சந்தி முகாம்களைக் கைப்பற்றி, இராணுவத்தை கண்டி வீதி வழியாக
கனகராயன்குளம் நோக்கி விரட்டியடிக்கும் போராளிகள்.

ஓயாத அலைகள் 3

புயல் எழுந்ததென பெண்புலிகள் அணி இங்கே.
இனி ஓயாத அலைகள் என் பகைவன் பாசறை எரியும்.

கனகராயன்குளம் படைத்தளத்தினில் இராணுவத்தால் கைவிடப்பட்ட கவசவாகனங்களும் பெண்புலி வீரங்கனைகளும்.

இயாத அலைகள் 3

கைப்பற்றப்பட்ட கனரக வாகனங்களுடன் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள்.

கனகராயன்குளத்தில் 55வது டிவிசன் படைத்தளத்திற்கு அண்மையில் இராணுவம் கைவிட்டு ஓடிய கவசவாகனம் புலிகளின் கைகளில்.

நியாத அலைகள் 3

கனகராயன்குள படை முகாமில் பெண் புலிகள்.

55, 56வது பிரிகேட் படையணிகளின் கட்டளைத் தலைமையகத்தில் பெண் புலி வீரர்கள்.

தமிழ் ஆவணக்காப்
Tamileelam.com

கனகராயன்குள படை முகாமில் பெண் புலிகள்.

கனகராயன்குளத்தில் வெடித்துச் சிதறிய பாரிய ஆட்லறித் தளத்தைப் பார்வையிடும் மக்கள்.

இயாத அலைகள் 3

கனகராயன்குள ஆட்லறித் தளத்தில் இருந்த எறிகணைகளை மீட்கும் மக்கள்.

மாங்குளம் கண்டி வீதியில் மக்களும் புலிகளும்.

கனராயன்குள முகாமைக் கைப்பற்றிய புலிகள் அடுத்த முகாம் நோக்கி முன்னேறத் தயாராகின்றனர்.

கரிபட்டமுறிப்பு தொடர் காவலரண்களைத் தகர்த்து முன்னேறும் விடுதலைப் புலி வீரன்.

இயாத அலைகள் 3

இராணுவத்தால் கைவிடப்பட்ட இராணுவ வண்டியும் எறிகணைகளும்.

கனகராயன்குள முகாம் காப்பரண் ஒன்றில் இருந்து எறிகணைகளை மீட்கும் புலிகள்.

இயாத அலைகள் 3

கைப்பற்றப்பட்ட கரிப்பட்டமுறிப்பு இராணுவத் தளத்தினுள் வேங்கைகள்.

மீட்கப்பட்ட கரிப்பட்டமுறிப்புப் பகுதியில் மதகுரு ஒருவருடன் உரையாடும் தளபதி கேணல் விதுஷா.

இயாத அலைகள் 3

தமிழீழ ஆவணக்கூப்பு
Tamileelam Arch

புளியங்குள முகாமைக் கைப்பற்றியவாறு அடுத்த மினிமுகாம் நோக்கி நகரும் புலிவீரர்.

புலிவீரர்களால் கைப்பற்றப்பட்ட குளவிகுட்டான் ஆட்லறித்தளம்.

இயாத அலைகள் 3

தாக்கியழிக்கப்பட்ட சிறீலங்கா இராணுவத்தின் ஐந்தாவது ஆட்லறிப் பட்டாலியன் தளம்.

சிலோன் தியேட்டர் முகாம் நோக்கி முன்னேறிச் செல்லும் புலிகள்.

ஓயாத அலைகள் 3

கைப்பற்றிய கஜபாகு றெஜிமன்ரின் 8வது பட்டாலியன் நிலைகொண்டிருந்த தளப்பிரதேசத்தில் புலிகள்.

மீட்கப்பட்ட பாலம்பிட்டிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் படையணிகள்.

கைப்பற்றப்பட்ட கவசவாகனங்களுடன் தளபதி கேணல் தீபன்.

கைப்பற்றப்பட்ட கவசவாகனங்களுடன் புலிவீரர்கள்.

இயாத அலைகள் 3

போரிடும் புலிவீரனுக்கு தாகம் தணிக்கும் தமிழ் மகன்.

காயமடைந்த பெண் போராளிக்கு ஆறுதலளிக்கும் சக போராளி.

தனங்கிளப்புப் பகுதியில் படகுகள் மூலம் தரையிறங்கித் தாக்குதல் நடத்தியபோது விழுப்புண்ணடைந்த பெண் போராளியைப் புறக்களத்திற்கு எடுத்துச் செல்லும் சகதோழி.

நியாத அலைகள் 3

காயமடைந்த வீரர்களிற்கு இரத்ததானம் வழங்கும் மாணவர்கள்.

களத்தில் புலிகளைச் சந்தித்து உரையாடும் மாணவர் குழாம்.

தமிழீழ ஆவணகம்
Tamileelam Arch

களமுனைக்குச் செல்லத்தயாராகும் எல்லைப்படைவீரர்கள்.

தமிழீழ ஆவணகம்

கைப்பற்றிய சிங்கள இராணுவக் காவலரண் பகுதிகளில், விடுதலைப் புலிகளிற்கு உறுதுணையாகச் செயற்படும் எல்லைப்படை வீரர்கள்.

ஓயாத அலைகள் 3

விடுதலைப் புலிகளின் அதிவிசேட படையணியின் அணிவகுப்பு.

கொம்படிஊரியான் பாதையூடாக நகரும் புலியணிகள்.

ஓயாத அலைகள் 3

ஓயாத அலைகள் -3 படைநடவடிக்கையில் களம் திறக்க யாழ் கடனீரேரியைக்
கடக்கும் விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதலணி.

வெற்றிலைக்கேணிக் களமுனையில் உருக்குலைந்துபோன
கட்டடங்களிற்குள்ளும் உறுதிகுலையாது சண்டையிடுகின்ற விடுதலைப் புலிகள்.

இயாத அலைகள் 3

வெற்றிலைக்கேணிக் களமுனையில் உருக்குலைந்த கட்டடங்களையே காப்பரணாக்கிக் கொண்டு சமராடும் வேங்கைகள்.

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் முழ்கடிக்கப்பட்ட இரு டோறா பீரங்கிக் கலங்களிலிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள்.

வெற்றிலைக்கேணிக் கடற்படைத்தளத்தில் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின்போது
கைப்பற்றப்பட்ட அதிநவீன கனோன் பீரங்கி.

இயாத அலைகள் 3

பலத்த எறிகணைத் தாக்குதல், மோதல்களிற்கு மத்தியிலும் சக போராளிகளிற்கு உணவு எடுத்துச்செல்லும் பெண்புலிகள்.

கைப்பற்றிய சிங்கள இராணுவக் காவலரண் பகுதிகளில்,
விடுதலைப் புலிகளிற்கு உறுதுணையாகச் செயற்படும் எல்லைப்படை வீரர்கள்.

கட்டைக்காடு இராணுவமுகாமின் கரையோரக் காவலரண் ஒன்றைத் தாக்கியழிக்கத் தயாராகும் விடுதலைப்புலி வீரர்கள்.

Tamileelam Archive

வடபோர்முனையில் கைப்பற்றப்பட்ட கட்டைக்காட்டுத் தளப்பிரதேசம்.

ஓயாத அலைகள் 3

புல்லாவெளி இராணுவத் தளம் மீதான தாக்குதலின்போது ஆனையிறவில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தின் உழவுஇயந்திரம் விடுதலைப் புலிகளின் R.P.G தாக்குதலிற்கு உள்ளான பின்னர்.

தமிழ் ஆவணகம்
Tamileelam Arch

"பலவேகய -2" நடவடிக்கையின்போது ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவமுகாமாக மாற்றப்பட்டிருந்து பின் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின்போது விடுவிக்கப்பட்ட புல்லாவெளி கிறிஸ்தவ தேவாலயம்.

இயாத அலைகள் 3

களமுனையில் விழுப்புண் அடைந்த போராளிக்கு சிகிச்சையளிக்கும் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகள்.

இராணுவத்தின் செல்வீச்சில் காயமடைந்த வயோதிபருக்கு மருத்துவ சிகிச்சையளிக்கும் பெண் மருத்துவப் போராளிகள்.

ஓயாத அலைகள் 3

ஓயாத அலைகள் -3 வடபோர்முனையில் காயமடைந்த வீரர்களை மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச்செல்லும் கிராமியப்படையினர்.

செம்பியன்பற்றுத் தரையிறக்கத்திற்குத் தயாராகும் விடுதலைப் புலிகளும்,
வழியனுப்பும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களும்.

ஓயாத அலைகள் -3 சமரின் வடகளத்திற்குச் செல்கின்ற போராளிகளை வழியனுப்பும் பொதுமக்கள்.

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையில் மீட்கப்பட்ட தாளையடிப் பகுதியில் புலிவீரர்கள்.

ஓயாத அலைகள் 3

மீட்கப்பட்ட தாளையடிப் பகுதியில் வேங்கைவீரர்கள்.



மீட்கப்பட்ட உடுத்துறை மகாவித்தியாலயப் பகுதி.

தனங்கிளப்பு இராணுவமுகாமின் கண்காணிப்பு நிலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தும் விடுதலைப் புலிகளின் 50 கலிபர் அணியினர்.

தனங்கிளப்புப் பகுதியில் அமைந்திருந்த பலமான காவலரண் ஒன்றை தாக்கியழிக்கும் கவச எதிர்ப்பு அணியினரும் அதற்கு உறுதுணையாகச் செயற்படும் எல்லைப்படை வீரர்களும்.

தனங்கிளப்புப் பிரதேசத்தில் காவலரண்களிலும் பதுங்குகுழிகளிலும் நீர் நிறைந்திருந்த போதுங்கூட கைப்பற்றிய பிரதேசத்தைப் பாதுக்கவேண்டும் என்ற உறுதியுடன் நிலைகொண்டுள்ள புலிகள்.

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையில் கைப்பற்றிய கடற்படைத் தளத்தின் ராடார் நிலையம்.

மீட்கப்பட்ட பரந்தன் வீதியில் தடைகளை அகற்றும் விடுதலைப் புலிகள்.

மீட்கப்பட்ட பரந்தன் பகுதியில் பெண்புலிகள்.

ஓயாத அலைகள் 3

பரந்தன் படைத்தளம் மீதான தாக்குதலில் கைப்பற்றிய எரிபொருள் நிலையக் கட்டடத்திற்குள் இருந்து ஆயுதங்களை மீட்கும் எல்லைப்படை வீரர்கள்.

சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்போது சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டபின் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின்போது மீட்கப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை.

கைப்பற்றிய பரந்தன் பகுதி ஏ9 வீதியில் கண்ணிவெடிகளை அகற்றும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிப்பிரிவு பெண் போராளிகள்.

குடாரப்புவில் தரையிறங்கிய அணிகளுடன் தளபதி கேணல் பால்ராஜ்.

ஓயாத அலைகள் 3

கனரக மோட்டார்களை (120 மில்லிமீற்றர்) இலக்கு நோக்கி நகர்த்தும் பெண் புலிகள்.

முகமாலையில் பெண் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்ட இராணுவ டாங்கி.

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையில் கைப்பற்றிய ஆனையிறவுத்தள 2வது கெமுனுவோச் படைத்தளத்தில் புலிகள்.

கனரக ஆட்லறிகளை இயக்கும் போராளிகள்.

ஓயாத அலைகள் 3

கனரக ஆட்லறிகளை இயக்கும் புலிவீரர்கள்.

ஆனையிறவுத் தளத்திலிருந்து இராணுவம் தப்பியோடிய வழித்தடம்.

கைப்பற்றப்பட்ட ஆனையிறவுத் தளத்தில் புலிகள்.

ஆனையிறவு முகாமில் கைப்பற்றப்பட்ட 152 மி.மீ ஆட்லறியை, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பார்வையிடுகின்றார்.

இயாத அலைகள் 3

நாவற்குழிப் பகுதியில் பின்னுதைப்பற்ற பீரங்கியுடன் விடுதலைப் புலிகள்.

யாழ் நகரின் நுழைவாயிலில் நிலைகொள்ளும் புலிவீரர்கள்.

ஓயாத அலைகள் -3இன் வெற்றிச் செய்தியினை பருகும் தமிழீழ மக்கள்.

ஓயாத அலைகள் -3இன் வெற்றிச் செய்தியினை பருகும் தமிழீழ மக்கள்.

நியாத அலைகள் 3

மீண்டும் புத்துயிர்ப்புப் பெறும் வன்னிக் கிராமம் - மாங்குளம்.

மீண்டும் புத்துயிர்ப்புப் பெறும் வன்னிக் கிராமம் - ஒட்டுசுட்டான்.

“ஓயாத அலைகள் -3 வரலாற்றுச் சமர் நடந்து முடிந்து ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், காட்சிக்களமாய் இந்நிழற்படத் தொகுப் பானது எரிமலையின் சிறப்பு இணைப்பாக உங்கள் கரங்களில் தவழ் கின்றது.

குலையாத கட்டுப்பாடும், வழுவாத நேர்மையும், தமிழனின் வாழ்வு நெறி பிறழாத ஒழுக்கமும், சளையாத போர்த்திறனும், இளகாத வீரமும், யாரும் நினையாத வகையாக- எவரும் மிகையாக நேசிக்கும் உயிரை இயல்பாகத் துாக்கி எறியும் கலையாத தேசப்பற்றும் சுதந்திரத்தில் தணி யாத தாகமும் கொண்டோரால் இனத்தின் விடுதலைக்காக மேற்கொள் ளப்பட்ட சாதனைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றே ஓயாத அலைகள் -3.

இவ் ஆவணத் தொகுப்பானது காலங்காலமாக எமது எதிர்காலச் சந்ததிக்கும், உலகிற்கும் ஒரு தேசிய இனத்தின் மகத்துவத்தையும் அந்த இனத்தினை வழிநடாத்துகின்ற தலைமையின் ஆளுமையைச் சொல்லும் விதமாய் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்.”

எரிமலை நவம்பர் 2000 சிறப்பு இணைப்பு
இது ஒரு தாய்மண் வெளியீடு

தமிழீழ அரசுக்கணம்
Tamileelam Arch